


திருவாரூர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களிடம் நேற்று, கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துரையாடி, கடந்த ஓராண்டு காலமாக அவர்கள் மேற்கொண்ட பணிகள் குறித்து கேட்டறிந்தார்.





திண்டுக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களை திருச்சியில் நேற்று, கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சந்தித்து அவர்களுடைய பணிகளை ஆய்வு செய்தார். இதுகுறித்த தமது வலைதளப் பதிவில் "கழகத் தலைமை அறிவிக்கும் பணிகளை தங்கள் மாவட்டத்தில் செயல்படுத்திய விதம் – கலைஞர் நூற்றாண்டுப் பேச்சுப் போட்டிக்கான ஏற்பாடுகள் – இளைஞரணி மேற்கொண்ட நீட் ஒழிப்புப் போராட்டங்களை ஒருங்கிணைத்தது – முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை மக்களுக்குப் பயனுள்ள வகையில் கொண்டாடியது – நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் இளைஞரணி ஆற்றிய பணிகள் – புதிய உறுப்பினர்களை இளைஞரணியில் சேர்ப்பது உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்து ஒவ்வொருவரிடமும் விரிவாக கேட்டறிந்தோம். இளைஞரணிப் பொறுப்புக்கு நியமிக்கப்பட்டது முதல் கடந்த ஓராண்டாக அவர்கள் மேற்கொண்ட பணிகளுக்குச் சான்றாக புகைப்படத் தொகுப்புகள் – மினிட் புத்தகங்கள் – பத்திரிக்கைச் செய்திகள் போன்றவற்றை நம்மிடம் காண்பித்து எடுத்துக் கூறினர். அவற்றைப் பார்வையிட்டு திண்டுக்கல் மேற்கு மாவட்ட இளைஞரணியின் பணிகள் மென்மேலும் சிறக்க வாழ்த்தினோம்!" என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




திண்டுக்கல் மாநகர இளைஞரணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்களின் பணிகளை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று திருச்சியில் ஆய்வு செய்தார். இதுகுறித்த வலைதளப் பதிவில், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "இளைஞரணிப் பொறுப்புக்கு நியமிக்கப்பட்ட இந்த ஓராண்டில், தலைமைக்கழகம் அறிவிக்கின்ற பணிகளைச் செய்து முடிக்கின்ற விதம் – நீட் தேர்வுக்கு எதிராக இளைஞரணி முன்னெடுத்த போராட்டங்களில் இளைஞர்களைப் பங்கெடுக்க வைத்தது – "என் உயிரினும் மேலான பேச்சுப்போட்டிக்கான ஒருங்கிணைப்புப் பணிகள் – முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாக் கொண்டாட்டங்களை மக்கள் பயன்படும் வகையில் கொண்டாடியது – சேலம் மாநாட்டின் வெற்றிக்காக ஆற்றிய பணிகள் – நாடாளுமன்றத் தேர்தல் மற்றும் விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் கழக நிர்வாகிகளுடன் இணைந்து ஆற்றிய பணிகள் உள்ளிட்டவை குறித்து திண்டுக்கல் மாநகர இளைஞரணி அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் தனித்தனியாக எடுத்துக் கூறினர். அவர்களுடைய பணிகளுக்கு ஆவணமாக வைத்திருக்கும் மினிட் புத்தகம் – புகைப்படத் தொகுப்புகள் – செய்திக் குறிப்புகள் போன்றவற்றைப் பார்வையிட்டு திண்டுக்கல் மாநகரத்தில் நம் இளைஞரணியின் பணிகளை வேகப்படுத்துமாறு கேட்டுக்கொண்டோம்" என்று குறிப்பிட்டுள்ளார்.




திண்டுக்கல் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் கடந்த ஓராண்டாக மேற்கொண்ட பணிகளை கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் ஆய்வு செய்தார். இதுகுறித்து வலைதளப் பதிவில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், "இளைஞரணியின் முன்னெடுப்புகளை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும் விதமாக ஆற்றிவரும் பணிகள் – கலைஞர் நூற்றாண்டுப் பேச்சுப் போட்டி – சட்டமன்றத் தொகுதிக்கு ஒரு கலைஞர் நூலகம் அமைக்கும் பணிகள் – நாடாளுமன்றத் தேர்தல் & விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் மேற்கொண்ட பணிகள் – இல்லந்தோறும் இளைஞரணி முன்னெடுப்பின் கீழ் புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பது –சேலம் இளைஞரணி மாநாட்டுக்கான ஒருங்கிணைப்பு – கழகத்திற்கு எதிரான அவதூறுகளை முறியடிக்கும் வகையில் சமூக வலைதளங்களில் செயல்படுவது உள்ளிட்டவை குறித்துக் கேட்டறிந்தோம். இளைஞரணி மாவட்ட அமைப்பாளர் – துணை அமைப்பாளர்கள் கொண்டு வந்திருந்த புகைப்படங்கள் – பத்திரிக்கை செய்திகள் – மினிட் புத்தகம் போன்றவற்றை ஆய்வு செய்து, நம்முடைய கருத்துக்களைத் தெரிவித்தோம்" என்று குறிப்பிட்டுள்ளார்.



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 27.06.2024 நாளன்று முதலமைச்சர் அவர்களால் விதி எண்.110ன்கீழ் "காவேரிக்கரையில் அமைந்த மாநகரமான திருச்சிராப்பள்ளி மாநகரில் உலகத் தரம் வாய்ந்த மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் கலைஞர் பெயரால் அமைக்கப்படும்" என்ற அறிவிப்பினைத் தொடர்ந்து திருச்சிராப்பள்ளி மாநகரில் உலகத் தரம் வாய்ந்த மாபெரும் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் மதுரை – சென்னை தேசிய நெடுஞ்சாலை பகுதியில் அமையவுள்ளது. கலைஞர் பெயரால் திருச்சியில் அமையவிருக்கும் இந்தப் புதிய நூலகத்திற்கு தேர்வு செய்யப்பட்ட இடத்தை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பார்வையிட்டார். உடன் அமைச்சர்கள் கே.என்.நேரு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் இருந்தனர். இந்நிகழ்வில் மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், 3வது மண்டலக் குழுத் தலைவர் மு.மதிவாணன், திருச்சிராப்பள்ளி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், பொது நூலக இயக்குநர் க.இளம்பகவத் பொதுப்பணித்துறை, வருவாய்த்துறை, நூலகத்துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.


